# EASTERN UNIVERSITY, SRI LANKA
## FACULTY OF COMMERCE AND MANAGEMENT
## PART III EXAMINATION IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION & COMMERCE 1998/1999 EXTERNAL DEGREE

(MARCH 2005)

## BBA 405 - PROJECT MANAGEMENT

**Answer five questions including question No. 01** **Time: 03 hours**

## 1. FCM கம்பனி

FCM கம்பனி பலதரப்பட்ட உயர்தரமான அலுவலக தளபாடங்களையும் அதனுடன் தொடர்புடைய பொருட்களையும் பிளாஸ்டிக்கைப் பயன்படுத்தி உற்பத்தி செய்கின்றது. அக்கம்பனி வர்த்தக நிறுவனங்களுக்கே பெரும்பாலும் விற்பனை செய்வது . வழக்கம். ஆனால் தொழிற்சாலையைப் போன்று சிறந்த விற்பனை நிலையம் ஒன்றும் காணப்படுகின்றது.

### உற்பத்தி

தொழிற்சாலை நான்கு செலவு நிலையயங்களாக் பிரிக்கப்பட்டுள்ளது. களஞ்சியங்கள் இரும்பு விற்பனையாளரிடமிருந்து பிளாஸ்டிக்கை நேரடியாக பெற்றுக்கொள்கின்றன. இப் பிளாஸ்டிக்குகள் இயந்திர நிலையத்தில் தேவையான அளவுகளில் வெட்டப்பட்டு தனித்தனியான துண்டுகள் ஒட்டும் நிலையத்தில் ஒட்டப்படுகின்றன. இறுதியாக, ஒவ்வொரு பொருளும் வர்ணம் பூசி நிறைவு செய்யும் பொருட்டு நிறைவு செய்யும் நிலையத்திற்கு அனுப்பப்படும்.

இரண்டு வகையான பிளாஸ்டிக் தளபாடங்கள் உற்பத்திசெய்யப்படுகின்றன - நியமமானது, உயர்ந்தது. இவற்றிற்கான மாறும் அலகுச் செலவுகள் முறையே ரூபா 250.00 ரூபா 300.00 ஒவ்வொரு செய்முறைக்கும் தேவையான நேரம் (மணித்தியாளங்களில்) கீழே தரப்பட்டுள்ளன.

| நிலையம் | நியமம் | உயர்ந்தது | கிடைக்கக்கூடிய கிழமைக்கான மொத்த நேரம் |
|---|---|---|---|
| இயந்திரம் | 5 | 10 | 1000 |
| ஒட்டுதல் | 12.5 | 12.5 | 2000 |
| நிறைவு செய்தல் | 5 | 20 | 1800 |

விலையிடல்

தற்பொழுது, தளபாடங்கள் வர்த்தக நிலையங்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. ஏனென்றால், அதிக உற்பத்தியினை மேற்கொள்வதற்கு நிறுவனத்தின் இயலளவு போதாமையாகும். பொருட்களுக்கான விலைகள் முறையே நியமம் ரூபா.400.00 உயர்ந்தது ரூபா.500.00

விஸ்தரிப்பதற்கான சாத்தியப்பாடுகள்

வியாபாரத்தினை விஸ்தரிப்புதற்கான சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன. இயக்குனர்கள் நான்கு ஆண்டுத்திட்டத்திற்கான மூன்று பிரதான தெரிவுகளை அடையாளம் கண்டுள்ளனர்.

1. சில்லறை விற்பனை நிலையத்தினை விஸ்தரிப்பு செய்து கூடுதலான பொருட்களை சேர்த்துக்கொள்வதற்கு.
2. தபால் கட்டளை நிலையமாக மாற்றுவதற்கு
3. பசுமை இல்லங்களை உற்பத்தி செய்வதற்கு

இத்தெரிவுகள் ஆரம்ப முதலீடாக அ) ரூபா.375,000,00 ஆ) ரூபா.600,000.00 இ) ரூபா.1,000,000.00 வேண்டி நிற்கும. ஆண்டிறுதி காசுப்பாய்ச்சலின் விபரம் வருமாறு.

| | ஆண்டு 1 (ரூபா.000') | ஆண்டு 2 (ரூபா.000') | ஆண்டு 3 (ரூபா.000') | ஆண்டு 4 (ரூபா.000') |
|---|---|---|---|---|
| 1 | 200 | 250 | 250 | 250 |
| 2 | 250 | 300 | 400 | 500 |
| 3 | 250 | 500 | 750 | 750 |

வியாபார உதவியாளர்களின் சார்பு கருத்துக்களுக்கு மேலாக ஜெயா கம்பனி நுகர்வோர் சம்மந்தமான எந்த ஒரு கருத்தினையும் கொண்டிருக்கவில்லை. சில்லறை விற்பனை நிலையத்தின் சாத்தியமான விரிவாக்கத்தின் தற்போதய சேவையினை மேம்படுத்துவதற்காக ஜெயா கம்பனி தற்போதுள்ள சில்லறை நுகர்வோர் பற்றிய தகவல்களை திரட்டவுள்ளது.

வியாபாரத்தின் முகாமைத்துவத்தினை மேம்படுத்துவதற்கு இக்கம்பனி ஓர் கணனியை கொள்வனவு செய்ய உத்தேசித்துள்ளது. இயக்குனர்கள் தற்போதைக்கு ஓர் சிறிய முறைமை தேவை என தீர்மானித்து ஆண்டிற்கான திட்டமிடப்பட்டபடி வியாபாரம் 15% வளர்ச்சியடையுமாக இருந்தால் விரைவில் மிதமிஞ்சியதாகிவிடும். இதுதொடர்பாக மூன்று தெரிவுகளுக்கு அவர்கள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

LIB

அவை "சிறிய முறைமை", "விரிவாக்கக்கூடிய சிறிய முறைமை", அல்லது "பெரிய முறைமை" என்பனவாகும் இவை முறையே ரூபா.15,000 அல்லது ரூபா.20,000 அல்லது ரூபா.35,000 ஆகும்.

தற்போதிருந்து மூன்று அல்லது நான்கு வருடங்களில் கம்பனி விரும்பினால் சிறிய முறைமையினை, பெரிய முறைமைக்காக ரூபா.25,000ற்கு வியாபாரம் செய்வதற்கு அல்லது சிறிய விரிவாக்கக்கூடிய முறைமையினை ரூபா.15,000 ற்கு விரிவாக்கம் செய்வதற்கு இயக்குனர் பாரிய முறைமையின் அவசியத்தின் சாத்தியப்பாட்டினை மூன்று தொடக்கம் நான்கு ஆண்டு கால அடிப்படையில் மூன்றில் இரண்டு என கூட்டாக மதிப்பீடு செய்துள்ளனர்.

இயக்குனர்கள் விசேடமான மேசை கதிரைகளுக்கான அதிகரித்துவரும் செலவுகள் சம்மந்தமாக கவலையடைந்துள்ளனர். இவை தொழிற்காலையில் பிரத்தியோகமான பிரிவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. கடந்த 9 மாதங்களுக்கான உற்பத்தி செலவுகள் (ரூபா.'000) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| மாதம் | பங் | சித் | வை | ஆனி | ஆடி | ஆவணி | புரட் | ஐப் | கார் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| செலவுகள் | 37 | 39 | 40 | 40 | 42 | 45 | 48 | 49 | 50 |

கடந்த வருடம் இளம் குடும்பங்களை கவர்வதற்காக, கம்பனியானது சாதாரண பிளாஸ்டிக் விளையாட்டுப் பொருட்கள் (உ-ம்) trucks building blocks போன்றவற்றை விற்பனை செய்தது. இவ் விளையாட்டுப் பொருட்கள் தனிப்பட்ட அலகு ஒன்றில் தொழிற்சாலையில் உற்பத்தி செய்கின்றது. இதன் முதல் வருட விற்பனையில் விளையாட்டுப் பொருட்களுக்கான உற்பத்தியின் நிலையான செலவு 200/= ஒருகிழமைக்கும் மாறும் செலவு 12/= ஒரு அலகுக்கும் ஏற்படுகிறது. விற்பனை விலையானது அலகுக்கு 20/= உள்நாட்டு போட்டியாளர் இச் சந்தையில் சேர்ந்தமையினால், கிழமைக்கான விற்பனை சராசரியாக 50 (20/= விலையில்), தற்போது இது 40 (20/= விலையில்) ஆக மாறியுள்ளது.

இதன் காரணமாக விலையானது 19/=வாக குறைக்கப்பட்டு, விற்பனையானது கிழமைக்கு 50 ஆகிஉள்ளது.

இக்கம்பனியின் பிரச்சனைகளில் ஒன்று ஆனது பெரியளவு உற்பத்தி என்பதால் தர பராமரிப்பானது ஓர் பிரச்சனையாக உள்ளது. தற்போது FCM கம்பனியில் முறைமையான ஒரு தரக்கட்டுப்பாட்டு முறை காணப்படவில்லை.

மேற் கூறப்பட்ட தகவல்களைப்பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

a. விஸ்தரிப்பு திட்டத்திற்கான தகவல்களைப் பயன்படுத்தி விஸ்தரிப்பிற்கான மூன்று தெரிவுகளையும் தேறிய இற்றைப் பெறுமதி அடிப்படையில் முதலீட்டிற்கான கிரயம் 10% என்ற எடுகோலில் (NPV) மதிப்பிட்டு ஒரு தெரிவினை சிபார் செய்து அதற்கான காரணம் தருக

(12 புள்ளிகள்)

b. உமது தெரிவிற்கான அகத்திரும்பல் வீதத்தினை கணிப்பிடுக

(08 புள்ளிகள்)

c. முகாமைக்கு உமது விடையினை தெளிவு படுத்துக,

(12 புள்ளிகள்)

(மொத்தம் 28 புள்ளிகள்)

2) a. பல்வேறுபட்ட செயற்திட்டங்களிலிருந்து ஓர் செயற்திட்டத்தினை தெரிவு செய்கின்றபோது கருத்திலெடுக்கப்படவேண்டிய காரணிகளை சுருக்கமாக விளக்குக?

(08 புள்ளிகள்)

b. வேறுபட்ட செயற்திட்ட வகைகளை அடையாளம் கண்டு சுருக்கமாக விளக்குக?

(10 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)

3) a. செயற்திட்ட உருவாக்கம் என்பதினை வரைவிலக்கணப்படுத்தி அதன் முக்கியத்துவத்தினை விளக்குக.

(06 புள்ளிகள்)

c. ஓர் அபிவிருத்தி செயற்திட்டத்தினை உருவாக்கும் போது கருத்தில் கொள்ளப்பட வேண்டிய சாத்தியப்பாட்டு ஆய்வுக் காரணிகளை விபரிக்குக.

(12 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)

LIB

a. அபிவிருத்தி செயற்திட்டங்களில், வினைத்திறனால் பெறுமதியிடலின் பங்கினை ஆய்வு செய்து அவ் ஆய்வின் போது கவனிக்கப்பட வேண்டிய காரணிகளை எடுத்துரைக்குக.

(12 புள்ளிகள்)

b. செயற்திட்டத்தினை மதிப்பீடு செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட நுட்பங்களை விளக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)

a. Means – Ends ஆய்வு, மற்றும் Logical framework என்பவற்றின் உதவியுடன் எவ்வாறு செயற்திட்டம் ஒன்றினை உருவாக்கலாம் என்பதனை உதாரணத்துடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

b. செயற்திட்டத்தின் குறிக்கோள்களை வெற்றிகரமாக அடைந்து கொள்வதற்கு இயலளவு முகாமைத்துவத்தின் பயன்பாடு யாது என்பதனை சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)

a. வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கும் நிறுவனமொன்று தனது வலயக் காரியாலயத்தினை நிறுவுவதற்காக பல அடுக்குமாடிகளைக் கொண்ட கட்டிடத்தில் ஓர் தளத்தினை வாடகைக்கு எடுத்துக் கொண்டுள்ளது. இத்தளத்தில் ஐந்து முகாமையாளர்கட்கு ஒதுக்கீடு செய்யக்கூடிய வகையில் ஐந்து அறைகள் உள்ளது.

ஒவ்வொரு அறையும் தனிப்பட்ட நன்மை, தீமைகளைக் கொண்டுள்ளது. சில அறைகளில் யன்னல்கள் காணப்படுகின்றன, சில அறைகள் கழுவும் அறைகட்கு (Washrooms) அருகாமையிலும், சில சிற்றுண்டிச் சாலைக்கு அருகாமையிலும் அமைந்துள்ளது.

ஒவ்வோர் அறையும் வேறுபட்ட அளவிலும், அமைப்பிலும் அமைந்துள்ளது. முகாமையாளர்கள் ஒவ்வொருவரும் பின்வரும் அறைகள் ஐந்தில் 301, 302, 303, 304, 305 தமது விருப்பத்தினை வரிசைப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் அவர்களின் விருப்பங்களின் வரிசைக்கடுத்தல் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றது.

முகாமையாளர்

| $M_1$ | $M_2$ | $M_3$ | $M_4$ | $M_5$ |
|---|---|---|---|---|
| 302 | 302 | 303 | 302 | 301 |
| 303 | 304 | 301 | 305 | 302 |
| 304 | 305 | 304 | 304 | 305 |
| | 301 | 305 | 303 | |
| | | 302 | | |

அனேகமான முகாமையராளர்கள் தமது வரிசைப்படுத்தலில் அனைத்து அறைகளையும் உள்ளடக்கவில்லை. ஏனெனில் அவர்கள் சில அறைகளில் திருப்தியடையவில்லை, இதனால் அவ் அறைகளை தமது வரிசைப்படுத்தலில் இருந்து நீக்கிவிட்டார்கள். முகாமையாளர்களின் விருப்பங்கள் எணகளில் அளவிடலாம் என்ற எடுகோளின் அடிப்படையில், எவ் முகாமையாளர்கட்கு எவ் அறையினை ஒப்படைக்கலாம் என்பதனை அடையாளம் காண்க.

உங்களது உச்ச தீர்வை வியாக்கியானம் செய்க.

(18 புள்ளிகள்)

a. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பராமரிப்புப் பகுதி (Maintenance dept) புதுகட்டிட பகுதியில் வீதி விளக்குகளை நிறுவுவதற்கான (To layout) செயற்திட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்துகின்றது. பின்வரும் அட்டவணையானது அச் செயற்திட்டத்திற்கு தேவையான காலப்பகுதி மற்றும் மனிதவளம் என்பவற்றினையும் காட்டுகின்றது.

| ACTIVITY | PRE. ACTIVITY | DURATION | NO.OF MEN |
|---|---|---|---|
| A | - | 2 | 10 |
| B | A | 3 | 6 |
| C | A | 4 | 8 |
| D | A | 2 | 14 |
| E | C | 4 | 8 |
| F | C | 3 | 6 |
| G | D | 6 | 8 |
| H | F, G | 6 | 6 |
| I | E | 5 | 16 |
| J | B | 4 | 8 |
| K | H, I | 4 | 18 |

a. வலைப்பின்னல் வரைபடத்தினை வரைந்து, அவதிவழிப்பாதையினை அடையாளம் காண்க.

(08 புள்ளிகள்)

b. மேலே தரப்பட்ட மனித வளத்தின் அடிப்படையில், இச் செயற்திட்டதிற்குத் தேவைப்படும் மொத்த மனித வளத்தினை கணிப்பீடு செய்க.

(04 புள்ளிகள்)

c. ஓர் நாளுக்குக் கிடைக்கக் கூடிய மனிதவளம் 28 எனின், செயற்திட்டத்தின் வெற்றிகரமான நிறைவேற்றத்திற்கு நீர் எவ்வாறு செயற்பாடுகளை சீராக்கம் செய்வீர்?

(06 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)

பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பெழுதுக.

1. சாத்தியப்பாட்டு கற்கை
2. செயற்திட்ட மதிப்பீடு
3. இயலளவு முகாமைத்துவம்
4. உணர்திறன் பகுப்பு ஆய்வு
5. முதலீட்டு பெறுமதியிடல்
6. நிச்சயமற்ற தன்மை

(3 x 6 = 18 புள்ளிகள்)

LIBRARY
Eastern University, Sri Lanka.